# திருவள்ளுவர் சேவா மன்றம்

## சனசமூக நிலையம்

சங்கரப்பிள்ளை விதி, — ஆனைக்கோட்டை.



## மன்ற முன்தோற்றம்

ஸ்தாபிதம்: 10-10-1965.

# திருவள்ளுவர் சேவா மன்றம்
## சன சமூக நிலையம்
### சங்கரப்பிள்ளை வீதி, — ஆனைக்கோட்டை.
# 10வது ஆண்டு நிறைவு விழாவும், சிறப்புமலர் வெளியீடும்.

## நிகழ்ச்சி நிரல்

1. மங்கல விளக்கேற்றல்:
A. C. நாகராசா அவர்கள் (P. R. O.)
2. தேவாரம்: செல்வன். ந. உதயகுமார்
3. நிலைய கீதம்: சிறுவர்கள்
4. வரவேற்புரை: திரு. மு. பாக்கியநாதன்
(இணைப் பொருளாளர்)
5. தலைமையுரை: திரு. வே. பாலகிருஷ்ணன்
(விழாக்குழு தலைவர்)
6. மலர் வெளியீட்டுரை:
திரு. பொன். கனகரத்தினம் அவர்கள்
7. மலர் ஆசியுரை:
பண்டிதர்; திரு. க. இராசையா அவர்கள்

### பேச்சாளர்கள்

திரு. சி. மார்க்கண்டு J. P.
(மன்றப் போஷகர், தலைவர் மா. கி. ச.)

செல்வன். ம. வே. பாலசிங்கம் (மன்றத் தலைவர்)

திரு. மா. பசுபதி அவர்கள் (பொருளாளர்)

திரு. மா. பவானந்தன் அவர்கள் (செயலாளர்)

திரு. ச. அப்பையா அவர்கள்

திரு. வி. தர்மலிங்கம் அவர்கள்
(தே. பே. உ. உடுவில் தொகுதி)

திரு. ஆ. சிவநேயச்செல்வன்
B. A. Hons. (பல்கலைக் கழகம், யாழ், வளாகம்)

திரு. மயிலை சண்முகநாதன் அவர்கள் B. O. L.)

வித்துவான். க. நா. வேலன் அவர்கள் (B. O. L.)

கௌரவ திரு. A. C. நாகராசா
(வடமாநில பொதுசனத் தொடர்பு அதிகாரி)
அவர்களால் முதலிரு பிரதிகளும் வழங்கப்படும்.

பிரதி பெறுவோர்:-

சிவநெறிக்காவலரும், கொடைவள்ளலுமான, மில்க்வைற் அதிபர்
**உயர்திரு. க. கனகராசா J. P. அவர்கள்**

எமது தொகுதி தே. அ. பேரவை உறுப்பினர்
**உயர்திரு. வி. தர்மலிங்கம் M. P. அவர்கள்**

## சிறப்புரை நிகழ்த்துபவர்கள்

திரு. ஹென்றி ஆசிர்வாதம் J. P. அவர்கள்
,, கோபாலரட்ணம் அவர்கள் (D. R. O வலி - மேற்கு)
,, கந்தையா அவர்கள்
(சுகாதாரப் பரிசோதகர் ஆனைக்கோட்டை)
,, தேவகடாச்சம் B. Sc. அவர்கள்
(கயரோக பிரசார உத்தியோகஸ்தர்)
,, ஆ. சாமிநாதன் அர்வகள் (கி. சே. ஆனைக்கோட்டை)

## கவியரங்கு

தலைவர்: திரு. கந்தவனம் B. A. அவர்கள்
கவிஞர்: திரு. வே. ஐயாத்துரை அவர்கள்
,, செல்வன் புவனேந்திரன் (புரட்சிமாறன்) அவர்கள்
,, செல்வன் சிவபாலன் அவர்கள்
,, காரை, சுந்தரம்பிள்ளை B. A. அவர்கள்
நன்றியுரை: செல்வன் வே. பாலேந்திரன்
இணைச்செயலாளர்

**★ இன்னிசை விருந்து ★**

## ஈழத்துப் பொப் இசைப் பாடகர்கள்

# நுழை வாயில் ✶ ✶ ✶ ✶

''கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டிவ் உலகு''



நிலையம் ஸ்தாபிப்பது இக்காலத்தில் புதுமையன்று. ஆனால் அவை சாதிக்கும் நல் விடயங்களிலே பெருமை பெறுகின்றது. இதற்கமைய பல பிரச்சனைகள் மத்தியிலே வேதனையாயினும், சாதனையாக இப்பணியை மேற்கொண்டோம் மன்றம் சாதித்தது என்ன? என்னும் வினாவுக்கு சாதனமாக உறுதிபூண்டு இதனை உருவாக்கி வெளியிடுகின்றோம். அதிலும் ஆண்டு விழாச் சிறப்புமுதல் மலராக மலருவதினால் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்,

நம்பணிதனை வெளிப்படையாகவும் உள்ளீடாகவும் அறிந்த பல பெரியோர்கள் ஆசியுரைகளை வழங்கியுள்ளார்கள் குறிப்பாக எமது உள்ளூராட்சி பொது நிர்வாக நீதி அமைச்சரில் இருந்து தமிழ்நாட்டு முதலமைச்சர் வரை இதற்கு ஆசியுரை வழங்கியுள்ளதால் இம்மலர் தரத்தினைப் பெறுகின்றது. இத்தோடு எம் நிலையத்தாரின் கடந்தகால நினைவுகளையும், நிலையத்தின் அவசியத்தையும், சாதனையையும், பின்னணியாகக் கொண்ட பல கட்டுரைகளையும் இணைத்திருப்பதினால் எமது சீரினை இம்மலர் வெளிப்படுத்துவனவாக அமைகின்றது.

மன்றத் திறப்பு விழாவை பார்ப்பனபோன்று அமையும் படங்களையும், அவற்றில் கலந்திருந்த பெரியோர்களையும், எம்நிலையத்தின்

முகத்தோற்றத்தினையும், நிலைய உறுப்பினரையும், நிர்வாகிகளைக் கொண்ட படங்களும் இவற்றில் இணைந்திருப்பதனால் மலர் மணம் பெறுகின்றன. ஆகவே இவையாவும் வாசகர்களாகிய தங்களுக்கு நம்பணிகளின் எழுச்சிதனை முன்னிறுத்தும் என்பதில் ஐயமில்லை.

இந்நூலைத் தொகுக்கும் பணியில் முன்னின்றுழைத்த செல்வன் ம. வே. பாலசிங்கம், செல்வன் சோ. இராசரத்தினம் அவர்கட்கும் இவற்றை பகுதியுறப் பிரித்து ஒழுங்குபடுத்திய செல்வன் சி. இராசதுரை, செல்வன் பொ. பத்மநாதன் அவர்கட்கும், பிழைகளை திருத்தி பணிபுரிந்த செல்வன் வி. ரவீந்திரராஜ் அவர்கட்கும் சிறந்தமுறையில் வெகு விரைவாக அதற்கான புளக்குகளை செய்துதவிய கொழும்பு ஸ்ருடியோ, தரன் ஸ்ரூடியோ அதிபர்களுக்கும், இம்மன்றத்தின் உண்மையான பணியறிந்து தங்கள் விளம்பரங்களை எமக்களித்து உத்வீகமளித்த ஸ்தாபன அதிபர்களுக்கும், நன்கொடை வளங்கிய நல்லோர்க்கும் இவ்வெளியீட்டு விழாவுக்கு நேராகவும் மறைமுகமாகவும், ஆக்கப்பணி புரிந்த மன்றத்தார், மற்றும் அன்பர்களுக்கும், குறுகிய காலத்தில் சீராக அச்சேற்றித் தந்த திருவள்ளுவர் அச்சகத்தாருக்கும் மலர் குழு சார்பாகவும், மன்றத்தின் சார்பாகவும் எனது சார்பாகவும், எனையீன்ற ஈழத்தாய் நாட்டிற்கும், எனது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வே. பாலேந்திரன்
(துணைச் செயலாளர்)
(பல்கலைக்கழக புகுமுக வகுப்பு)



மூதறிஞர் சா. ஜெ. வே. செல்வநாயகம் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி



அன்புடையீர்!

திருவள்ளுவர் சேவா மன்றம் சனசமூக நிலையம் தனது பத்தாவது ஆண்டு விழாவை 1975-ம் ஆண்டு தைத் திங்களில் கொண்டாட விருப்பதை அறிந்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

கடந்த பத்து ஆண்டுகளாக ஆனைக்கோட்டை மக்களுக்குச் சேவை செய்து வந்திருக்கும் இந்நிலையம் மேலும் பல ஆண்டுகள் தொடர்ந்து சேவை செய்துவர வாழ்த்துகிறேன்.

தமிழ் முனிவர் திருவள்ளுவரின் பெயரில் அமைந்துள்ள இந்நிலையம் அம் முனிவர் தன் ஒப்பில்லாத் திருக்குறளின் மூலம் எமக்கு அருளிச் செய்திருக்கும் வழியில் நின்று மக்களை அவர் காட்டிய வழியில் நடாத்தி வரப் பாடுபட்டு வருமாக.

இந்நிலையம் தனது பத்தாவது ஆண்டு நிறைவை ஒட்டி வெளியிடவிருக்கும் சிறப்பு மலருக்கு எனது நல் வாழ்த்துக்களை அனுப்புவதில் பெருமைப்படுகிறேன்.

இப்படிக்கு
தங்கள் அன்புள்ள
சா. ஜெ. வே. செல்வநாயகம்

16, அல்பிறட் ஹவுஸ் தோட்டம்,
கொழும்பு-3.

தொலைபேசி: 88758.

உங்களுடைய மாங்காய்

கூடிய விலைக்கு விற்க

இங்கே அனுப்புங்கள்

V

# எச். ஏ. எஸ். அன் சன்

V

பணமும் ரசீதும் உடன் அனுப்பிவைக்கப்படும்

இல 5, சிறிய சந்தை
புறக்கோட்டை,
கொழும்பு-11.

தொலைபேசி: 35876
,, இரவு: 21685
தந்தி: HASANDSON.

அன்றைய கலைஞர், இன்றைய முதல்வர்

# மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி அவர்களின்

நெஞ்சம் நிறைந்த

## ஆசிச்செய்தி



முதலமைச்சர் 15-5-74

இலங்கைத் திருவள்ளுவர் சேவா மன்றம் கடந்த பத்து வருடங்களாகத் தொடர்ந்து தமிழ்த் தொண்டாற்றி வருவதறிந்து மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரே வாழ்க்கையின் தத்துவங்கள், அறிவுரைகளையெல்லாம் ஈரடிக்குறள் மூலம் இவ்வுலகிற்கு ஒப்படைத்த வள்ளுவர் பெயரால் மன்றமமைத்துப் பணியாற்றி வருவதறிந்து மனமாரப் பாராட்டுகின்றேன்.

பத்தாவது ஆண்டுவிழா சீரும் சிறப்புடன் நடைபெற, விழாவினையொட்டி வெளியிடப்படும் மலர் மலர்ந்து மணம் பரப்ப எனது நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மன்றத்துக்கு மனம் நிறைந்த வாழ்த்துக்கள்
கூறுகின்றோம்

எங்களிடம் சகலவிதமான
அலுமீனியம், பித்தளை,
வெண்கலப் பாத்திரங்கள்
யாவும் தொகையாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

**அம்பிகை குமரன் ஸ்ரோர்ஸ்**

234, காஸ்வேக்ஸ் தெரு,
கொழும்பு—11
தொலைபேசி: 34160.

மன்றம் மென்மேலும்
வளர்ச்சி பெற எமது
நல்லாசிகள்

V

**லிபேர்ட்டி**
**சினிமா**
அச்சுவேலி.

10-வது ஆண்டு விழாமலர
வாழ்த்துகிறோம்

V

**ஸ்ரார் எலக்ரிக்**
**வெல்டிங்**
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

## எமது தொகுதி தேசியஅரசப் பேரவை உறுப்பினர்
## வி. தர்மலிங்கம் அவர்களின்

# ஆசியுரை



இலங்கை திருவள்ளுவர் சேவா மன்றம் சனசமூக நிலையத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவையிட்டு வெளியிட இருக்கும் சிறப்பு மலருக்கு ஆசிச்செய்தி அனுப்பும்படி கேட்டமைக்கு நன்றி.

உங்களுடைய மன்றம் கல்வி, கலை, கலாச்சாரத் துறைகளில் மக்களுக்குத் தொண்டாற்றி வருவதைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

இளைஞர்களுடைய ஊக்கத்தினாலும், விடாமுயற்சியினாலும் மக்களுடைய ஒத்துழைப்பினாலும் இம்மன்றம் பெரும் வளர்ச்சி அடைந்துள்ளது.

மென்மேலும் மக்களுக்கு இதுவரையில் செய்து வந்த சேவையை செய்ய வேண்டுமென்றும் அப்பணிகளில் வளர வேண்டுமென்றும் வாழ்த்துகின்றேன்.

சுன்னாகம், 
25-12-74.

வி. தர்மலிங்கம்
பா. உ. உடுவில்

திருவள்ளுவர் சேவா மன்றத்தின் 10-வது
ஆண்டு நிறைவு விழாவையிட்டு
எமது உளம் கனிந்த நல்வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்கிறோம்.

சகலவிதமான

# உள்ளூர் விளை பொருட்களையும்

சந்தைப்படுத்தும்

# மிகச் சிறந்த ஸ்தாபனம்

## அம்பாள் ரேடிங் கொம்பனி

78, 4-ம் குறுக்குத் தெரு,

கொழும்பு-11.

# அரசாங்க நிர்வாக உள்நாட்டு அமைச்சர்

### அவர்களின்

## ஆசிச்செய்தி



தங்கள் நிலையத்தின் 10-வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு வெளியிடப்படும் இம்மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

ஆர்வமும், துடிப்பும் உள்ள இளைஞர்களால் செயற்படுத்தப்படும் இந்நிலையம் இப்பகுதி மக்களின் பூரண ஒத்துழைப்புடன் அவர்களுடைய கல்வி, கலை, கலாச்சார பொருளாதார வளர்ச்சிக்காகவும், கிராமத்தின் அபிவிருத்திக்காகவும் பல் வேறு சேவை செய்து வருவதாக அறிகின்றேன்

இளைஞர்கள் ஓய்வு நேரத்தினை பயனுள்ள வகையில் கழிப்பதற்கும், பெரியோர்கள் பொது அறிவு பெற்று ஒற்றுமையுடன் வாழ்வதற்கும் வாசிகசாலை சமய நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள் போன்ற பல்வேறு சேவைகளைச் செய்து வரும் இந்நிலையத்தின் முயற்சிகள் மேலும் வளர்ச்சி பெற எனது நல்லாசிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சுதந்திரச் சதுக்கம்,
தபாற்பெட்டி இல: 552
கொழும்பு—7.

பீலிக்ஸ் ஆர். டி. பண்டாரநாயக்கா
கௌரவ அமைச்சர்.

மன்றத்தின் 10-வது ஆண்டு விழா சிறப்புற
எமது வாழ்த்துக்கள்



கவர்ச்சிமிக்க நகைகளுக்கும்

உயர்தர டிசைன்களுக்கும்

இன்றே விஜயம் செய்யுங்கள்

# வெஸ்டன் நகை மாளிகை

தொலைபேசி: 33977

60 கடற்கரை வீதி, — கொழும்பு - 11

மன்றத்தின் 10வது ஆண்டு விழா சிறப்புற
எமது வாழ்த்துக்கள்

சகல விதமான இயந்திர உப உறுப்புகளும்
சிறந்த முறையில் செய்து கொடுப்பவர்கள்

# (F) பைனல் ரேணிங் வேக்ஸ்

103, கஸ்தூரியார் வீதி, — யாழ்ப்பாணம்.

கிளை ஸ்தாபனம்:

எம். எஸ். ஆர். இன்டஸ்றீஸ்

மணிக்கூட்டு வீதி, — யாழ்ப்பாணம்.

போன்: 7140.

### தமிழர் கூட்டணித் தொண்டன்

## மாண்புமிகு திரு. மு. சிவசிதம்பரம் அவர்களின்

# அன்புகனிந்த ஆசியுரை

''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு''



எனப் பெருமிதத்துடன் பாரதி பாடிய திருவள்ளுவர் பெயரைக் கொண்டு, குறள்வழி நின்று, ஆனைக்கோட்டை திருவள்ளுவர் சேவா மன்றம் 10 ஆண்டுகளாக மக்கள் சேவையே மகேசன் சேவை யென்ற தத்துவத்துக்கிணங்க செய்த நற் தொண்டைக் கேட்டு மகிழ்கின்றேன், பெருமைப்படுகின்றேன். மன்றங்கள் தோன்றுவதும் சில காலம் இயங்குவதும் பின்னர் மறைவதையும் தான் பொதுவாக நாம் காணுகின்றோம். இதற்கு விதி விலக்காசப் 10 ஆண்டுகள் சிறப்புற இம் மன்றத்தை இயக்கியவர்களை பாராட்டுகின்றேன், வாழ்த்துகின்றேன்.

உங்கள் பணி தொடரட்டும் அத்துடன் இனவிடுதலைக்கும், சமூகப் புரட்சிக்கும், பொருளாதார சுபீட்சத்துக்கும் வழிகாட்டியாக உங்கள் மன்றம் அமையட்டும் என வேண்டுகின்றேன் நல்ல நாட்டிற்கு இலக்கணம் வகுத்தார் வள்ளுவர்.

''தள்ளா விளையுளுந் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு''

உணவைப் பெருக்கும் உழவர்களும், பாராளும் திறனுடைய அறிஞர்களும், ஏற்றத் தாழ்விலாது எல்லோரும் செல்வர்களாக நிறைந்த நாடே நல்நாடு என்பது வள்ளுவன் வாக்கு. உங்களை அப்படி ஆக்குங்கள்.

வணக்கம்.

மு. சிவசிதம்பரம்

எமது உள்ளம் நிறைந்த வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

மோட்டார், உழவு இயந்திரங்களின்
உதிரிப்பாகங்களை
உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.

★ ஸ்ரீ பிரகாஸ் மோட்டார் ஸ்ரோர்ஸ் ★
566/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

எமது உள்ளம் நிறைந்த வாழ்த்துக்களை
தெரிவித்துக் கொள்ளுகின்றோம்

அ. யோ. இராஜசூரியர்
லங்கா மண்ணெண்ணை
விநியோகஸ்தர்
ஸ்ரான்லி வீதி, — யாழ்ப்பாணம்.

இரா. நெடுஞ்செழியன்
கல்வி-சுற்றுலா — அமைச்சர்

தலைமை - செயலகம்
சென்னை-9.
19-6-1974.

தமிழக அமைச்சர்

# மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்

அவர்களின் நெஞ்சினிக்கும்

# ஆசிச் செய்தி

இலங்கைவாழ் மக்கள் திருவள்ளுவர் சேவா மன்றம் என்ற பெயரில் இலக்கியத் தொண்டாற்றி வருவது கண்டு தமிழகத்தின் சார்பில் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

1330 குறட்பாக்களைச் சுவைபட, கருத்துற, தமிழன்னைக்குப் படைத்திட்ட செந்நாப் புலவரது புகழ் இவ்வையகம் உள்ளளவும் நிலைக்கும். அவர் தம் பெயரில் இயக்கிவரும் மன்றம் எல்லா நிலைகளிலும் தமிழ்ப் பணி கொண்டு தொண்டாற்றிட விரும்புகின்றேன் விழாச் சிறப்பு மலரும் எண்ணிய எண்ணம்போல் நிகழ்வுற என் வாழ்த்துக்களை உரித்தாக்குகின்றேன்.

இரா. நெடுஞ்செழியன்

தங்கள் மன்றம் மென்மேலும் சிறந்து
வளர்ச்சியுற எமது அன்பு வாழ்த்துக்கள்.

எமது ஆலையில் சிறந்த முறையில்
அரைக்கப்பட்ட குரக்கன்மா, இறுங்குமா, சோழம்மா,
மரவள்ளிமா, றவ்வை ஆகியவற்றைச்
சில்லறையாகவும் மொத்தமாகவும்.
பெற்றுக்கொள்ளலாம்.

விஸ்கன் மில்ஸ்

மானிப்பாய்.

உரிமையாளர்:- வே. சி. கணபதிப்பிள்ளை & சகோதரர்
☎ போன்: 519.

மன்றத்திற்கு எம் நல்வாழ்த்துக்கள்
உரித்தாகுக.

ரயர் திருத்துதல், ரியூப் வல்கனைஸ்ட்
செய்தல், ஆகிய வேலைகள்
உத்தரவாதத்துடனும் நம்பிக்கையுடனும்
சிறந்த முறையில் செய்ய

— ஒரே ஸ்தாபனம் —

சந்திரா ரயர் வேக்ஸ்

உரிமையாளர்: சந்திரம்பிள்ளை

72, கே. கே. எஸ். வீதி, — யாழ்ப்பாணம்.

தபால் தந்தி,
மந்திரிக் காரியாலயம்

டியூக் வீதி,
கொழும்பு — 1
6-1-1975.



கௌரவ தபால் தந்தித் தொடர்பு அமைச்சர்

# திரு. செல்லையா குமாரசூரியர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

★

உங்கள் திருவள்ளுவர் சேவா மன்றம், சனசமூக நிலையம் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுவதை அறிந்து மகிழ்கிறேன். பலராலும் தமிழர்களின் நீதி நூலென்று போற்றப்படும் திருக்குறள் நூலைத் தந்து மக்களுக்கு அழியாத சேவையைச் செய்த திருவள்ளுவரின் பெயரில் இயங்கும் மன்றம் மேலும் பொதுச் சேவையைச் செய்ய எனது வாழ்த்துக்கள்.

திருக்குறளில் சொல்லியுள்ள வழிகளைக் கடைப்பிடித்து அதன் வழி தொடர்ந்தால் இன்று நம்மை வருத்தும் பல துன்பப் பிடிகளில் இருந்து நாம் விலகி நமது நாட்டையும் வளம்படுத்த முடியும்.

செ. குமாரசூரியர்

உ








## வள்ளுவர் நெறியில் வையகம் வாழ்க!

வள்ளுவர் தந்த திருக்குறள், நாட்டு மக்களின் வாழ்வுப்பாதையை வகுத்தல் வேண்டும் என்று கருதி, எங்கள் சவற்கார மேலுறைகளில் குறட்பாக்களை அச்சிட்டுவருகிறோம். அன்பர்கள் ஆதரவாளர்கள் வள்ளுவம் பயின்று வாழ்வை வளஞ்செய்து கொள்வார்களாக.

வணக்கம்.

உரிமையாளர்

# மில்க்வைற் சவற்காரத் தொழிலகம்

த. பெ. இல 77,

யாழ்ப்பாணம்.

மன்றப்போஷகரும் மானிப்பாய் கிராமசபைத் தலைவருமான

# திரு. சி. மார்க்கண்டு J. P. அவர்களின்

# மாண்புமிகு ஆசிச்செய்தி

தொலைபேசி: 548

ஆனைக்கோட்டை,
15-10-1974.



அளப்பரிய பணிகளைப் புரிந்து வரும் ஆனைக்கோட்டை திருவள்ளுவர் சேவா மன்ற சனசமூக நிலையம் தனது பத்தாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

இம்மன்றம் வெளியிடும் சிறப்பு மலரை மனமார வரவேற்பதோடு, இச்சங்கம் வளர்மதிபோல் வளர்ந்து பல்லாண்டுகாலம் பணிபுரியவேண்டுமென வாழ்த்துகிறேன்.

சி. மார்க்கண்டு
தலைவர்
மானிப்பாய்க் கிராமசபை.

மன்றத்திற்கு எமது மனமுவந்த
வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சகலவித இரும்புக் கேற்றுக்களும்,
கிறில்களும், விரும்பிய டிசைன்களில்
சிறந்த முறையில் குறித்த காலத்தில்
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

மற்றும் மின்சார வேலைகளும்,
ஒட்டு வேலைகளும்
உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

# இராசரத்தினம் வேக்ஸ்

உரிமையாளர்
லூயீஸ் ஞானதாஸ்

72, மானிப்பாய் வீதி, — யாழ்ப்பாணம்.

K. KAMARAJ

8, Thirumalai Pillai Road,
T. Nagar Madras 600017,
Phone : 441373

20-9-74.

கர்மவீரர், காங்கிரஸ் தலைவர்

## மாண்புமிகு திரு. கு. காமராஜ் அவர்களது

## ஆசிச்செய்தி

அன்புள்ள நண்பர் அவர்கட்கு!

தங்களுடைய கடிதம் கிடைத்தது தங்கள் மன்றத்தின் 10-வது ஆண்டு நிறைவுவிழாவையொட்டி சிறப்பு மலர் வெளியிடுவதறிந்து மகிழ்ச்சி.

மலர் சிறப்புற அமைய எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தங்கள் அன்புள்ள

கு. காமராஜ்

*With best Complments from*

# Easwaran Iron Works

Hindu College View,
MANIPAY.

Manufacturers of:
**SHUTTER GATES & COLLAPSIBLE GATES.**

திருவள்ளுவர் சேவா மன்றத்தின்
10-வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு
எமது அன்பளிப்பு

# *திருவள்ளுவர் அச்சகம்*

நல்லூர் — யாழ்ப்பாணம்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்,
72, ஆனந்தா குமாரசாமி மாவத்தை,
கொழும்பு–7

## இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்

தலைவர்

# உயர்திரு செள. தொண்டமான் அவர்களின்


# ஆசியுரை

அளப்பரும் சேவை செய்து வரும் உங்கள் மன்றம் ஓர் சிறப்பு மலர் வெளியிட முன்வந்திருப்பதை அறிந்து மகிழ்ச்சி.

செய்யாமல் செய்த உதவியே சேவை எனப்படும்.
''செய்யாமல் செய்த உதவிக்கு வானகமும்
வையகமும் ஆற்றல் அரிது''
என்பது வள்ளுவன் வாக்கு.

அறிவின் கடலைக் கடைந்தெடுத்து அமுதத் திருக்குறள் தந்தவரும், தெய்வப் புலமைத் திருவள்ளுவரின் திருநாமம் தாங்கிநிற்கும் உங்கள் சேவா மன்றம் மக்கள் நலன் நாடி பயனுள்ள பல பணிகளாற்றி நிலமிசை நீடுழிவாழ மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

வணக்கம்



திருவள்ளுவர் சேவா மன்றத்தின் 10-வது
ஆண்டு நிறைவு விழாவையிட்டு
எமது உளம் கனிந்த நல்வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்கிறோம்.

சகலவிதமான
உள்ளூர் விளை பொருட்களையும்
சந்தைப்படுத்தும்
*மிகச் சிறந்த ஸ்தாபனம்*

எஸ். ஆறுமுகம் அன் பிறதேஸ்
104, 4ம் குறுக்குத் தெரு,
கொழும்பு - 11

தந்தி : ESSAYBROS. ☎ 29833.

புனித அர்ச்: அந்தோனியார்,
சுன்னாகம்,
9-1-1975.

## மன்றத் திறப்புவிழாத் தலைவரது

# ஆசிச்செய்தி

ஆனைக்கோட்டை திருவள்ளுவர் சேவா மன்ற சன சமூக நிலையம் கடந்த காலங்களில் மன்றத்தைச் சேர்ந்த மக்களுக்கு அரசியல் பொருளாதார சமூக விடுதலைக்காக பல நெருக்கடிகளுக்கு மத்தியில் துணிவுடன் செய்த சேவைகளை யான் மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன்.

மேலும் மன்றத்தின் வளர்ச்சியும் தூயபணிகளும் பல துறைகளிலும் பொலிந்து பொங்க இறைவனை ஆசிக் கின்றேன்.

வணக்கம்

ஆசிர்வாதம் ஹென்றி
சமாதான நீதிபதி,
பட்டினசபை உறுப்பினர்

---

''ஞாலங் கருதினுங் கைகூடுங் காலம்
கருதி யிடத்தாற் செயின்''

பத்து வருடகாலமாக நாட்டிற்குப் பணி புரிந்த
தங்களது மன்றம் என்றென்றும்
சிறப்புடன் இயங்கிவர எம் இதயங்கனிந்த

*நல்லாசிகள்*

எமது ஆலையில் சிறந்த முறையில்
அரைத்துத் தயாரிக்கப்பட்ட
அரிசிமா, குரக்கன்மா, சோழம்மா,
இறுங்குமா, மரவள்ளிமா
ஆகியவற்றை மொத்தமாகவும் சில்லறை
யாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
அத்துடன் நெல் குத்தியும் கொடுக்கப்படும்

# ஈஸ்லங்கா மில்

உரிமையாளர்கள் :
K. K. சிவராசா—K. பூபாலசிங்கம்

வெள்ளை மணல், சீனன்வாடி,
திருகோணமலை.

ம. பொ. சிவஞானம்
துணைத்தலைவர்,
தமிழ்நாடு சட்ட மன்றம்.

DY. CHAIRMAN TAMILNADU LEGISLATIVE COUNCIL
TRUTH ALONE TRIUMPHS

புனிதஜார்ஜ் கோட்டை,
சென்னை—9
20-9-74.



# சிலம்புச் செல்வரின் சிறப்புமிகு ஆசியுரை

அன்புடையீர் !

வணக்கம், திருவள்ளுவர் சேவா மன்றம் சனசமூக நிலையம் தனது 10வது ஆண்டு விழாவினைக் கொண்டாடுவதறிந்து மகிழ்ச்சியடைகின்றேன்.

விழா எல்லா வகையிலும் சிறப்புற நடைபெற வாழ்த்துகின்றேன்.

இலங்கை வாழ் தமிழர் ஒற்றுமையுடனும் எதுவரினும் மனங் குலையாது உறுதியுடனும், வாழ்க்கையில் முன்னேற வேண்டுமென்பது என் விருப்பம். முன்னேறுவார்கள் என்பது எனது நம்பிக்கை வள்ளுவர் குறள் மொழி உங்களுக்கெல்லாம் வழி காட்டுமாக என் வாழ்த்துக்கள்.

ம. பொ. சிவஞானம்

மன்றத்தார்க்கு எமது உளங்கனிந்த வாழ்த்துக்கள்
சிறந்த பட்டதாரி ஆசிரியர்களால்
புதிய போதனு முறைமூலம்
G. C. E. O/L, A/L வகுப்புகளுக்கு
முழுநேரக் கல்வி போதிக்கப்படும்
நேரம்: காலை 8-30 முதல் மாலை 3-30 வரை.
★ கல்வி போதனு நிலையம் ★
34, பலாலி வீதி — யாழ்ப்பாணம்.

திருவள்ளுவர் சேவா மன்றத்தின்
10-வது ஆண்டு நிறைவுவிழாவை முன்னிட்டு
எமது மங்கலகரமான வாழ்த்துக்கள்!

குமார் றேடேர்ஸ்

சாய்ப்புச் சாமான்—வாசனைத் திரவியங்கள்
விற்பனையாளர்

181, நொறிஸ் ரேட்,
கொழும்பு—11.

**Prof. X. S. Thaninayagam**

Bishop's House,
Valalai,
Atchuvely,
(Sri Ladka)
1-1-75

# வண. சேவியர் தனிநாயகம் அடிகள்

### அவர்கள் வழங்கும்

## அமுதமான ஆசியுரை


திருவள்ளுவர் சேவா மன்றம் 10 ஆண்டுகளாக சமூகத்திற்குப் பெருந் தொண்டாற்றியுள்ளது. உறுப்பினரிடம் ஒற்றுமையும், சீரிய பண்புமிருந்தால் பல முயற்சிகளில் ஈடுபட்டு வெற்றி காணலாம் என்பது திண்ணம்.

வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து நற்பணி ஆற்ற வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

சே. தனிநாயகம்

எமது உளம் நிறைந்த நல்லாசிகள் மன்றத்துக்கு

உரித்தாகுக!




யூ ஆசா

லூக்கஸ் பற்றறி

விற்பனையாளரும்

சீர்ப்படுத்தல் உயர்ந்த முறையில்

செய்து கொடுப்பவர்களும்.


தொடர்புகொள்ளுங்கள்

எஸ். ரி. விஸ்வலிங்கம் அன் சன்ஸ்

50, மானிப்பாய் வீதி,

யாழ்நகர்.

# மன்ற நிர்வாகிகள்



கீழே அமர்ந்திருப்பவர்கள் :

1. திரு. மக. பவானந்தன்
   கௌரவ செயலாளர்
2. செல்வன் ம. வே. பாலசிங்கம்
   கௌரவ தலைவர்
3. திரு. சி. மார்க்கண்டு J. P.
   கௌரவ போஷகர்
4. திரு. க. தணிகாசலம்
   உப தலைவர்
5. திரு. மா. பசுபதி
   கௌரவ பொருளாளர்

மேலே நிற்பவர்கள் :

1. திரு. வ. செல்லையா
   செயற்குழு உறுப்பினர்
2. செல்வன் வே. பாலேந்திரன்
   இணைச்செயலாளர்
3. செல்வன் க. கணபதிப்பிள்ளை
   செயற்குழு உறுப்பினர்
4. திரு. பொன் கனகரத்தினம்
   கணக்குப் பரிசோதகர்
5. திரு. வே. பரமநாதன்
   செயற்குழு உறுப்பினர்
6. திரு. பூ. பாக்கியநாதன்
   இணைப்பொருளாளர்

# மன்றத் தலைவர் தொகுப்புரை



எமது மன்றம் 1965ம் ஆண்டு ஐப்பசித்திங்கள் 10-ம் நாள் ஆரம்பிக்கப்பெற்றது. அன்று முதல் 1968 வரை நிரந்தரக் கட்டிடம் அமைக்கும் வரை எமது கூட்டங்களை மன்றச் சுற்றுடலில் உள்ள வெளிகளிலும், புல்தரைகளிலும், வீதிகளிலும், தென்னஞ்சோலைகளிலும் கூடினோம். ஆரம்ப காலத்தில் கூட்டம் மாதத்திற்கு 3-4 முறை நடைபெறும். மாலை 6 மணிமுதல் நள்ளிரவு 12-1 மணி வரை பல விடயங்களைப் பற்றி ஆராய்வோம். பனியிலும் மழையிலும் நனைந்து கூட்டம் கூடவேண்டிய சூழ்நிலையில் வளர்ந்தோம், திட்டங்களை தீட்டினோம். தீவிரமாகச் செயல்பட்டோம். மன்ற வளர்ச்சிக்காக அதிஷ்டலாபச் சீட்டு, நிதியுதவிப் படக்காட்சி, நிதி திரட்டல் மூலம் தேவைக்கேற்ப அவ்வப்பொழுது பணம் திரட்டினோம் செயல்பட்டோம்.

இம் மன்றத்தை ஸ்தாபிப்பதற்கு வித்திட்டவர்களில் யானும் ஒருவன் என்ற காரணத்தால் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். அன்று எமக்குள் வளர்ச்சிக்குரிய இயக்கம் இல்லாதபடியால் நாமெல்லோரும் சிதறுண்டு கொண்டோம். இந் நிலையைப் போக்கவேண்டும். என்பதற்காக 1965ம் ஆண்டிலே எல்லோரும் ஒன்று சேர்ந்து இம் மன்றத்தை அமைத்தோம். இந்த 10 வருட காலத்தில் நாம் பல கஷ்டங்களுக்கு மத்தியில் வளர்ச்சிபெற்று 10வது ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடுகின்ற இவ்வேளையில் மிக மகிழ்ச்சி அடைகிறோம்.

எமது கிராமத்தை ஏனைய கிராமங்களுடன் ஒப்பிடும் பொழுது நாம் மகிழ்ச்சி அடையாமல் இருக்கமுடியாது. ''ஒன்று பட்டால் உண்டு வாழ்வு'' என்பதற்கு ஒப்ப நாம்

எல்லோரும் ஒன்று சேர்ந்து செய்த பல விடயங்கள் பெரு வெற்றிகளை, சாதிக்க முடிந்தது என்பது குறிப்பிடத் தக்கது. எமது ஒற்றுமைதான் முயற்சிக்கு தூண்டு கோலாக அமைந்து குறுகிய காலத்திலே இந்த இயக்கத்தை ஓர் நிரந்தரமான நிலையமாக அமைப்பதற்கு ஏதுவாயிற்று. இவ்வேளையில் நிலையத்தை அமைப்பதற்குரிய நிலத்தை அன்பளிப்பாக ஈந்தவருக்கும், நிதியுதவி புரிந்த அங்கத்தவர்கள் எல்லோருக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம்.

1968ம் ஆண்டு தைத்திங்கள் 15ம் நாள் திரு. ஆசீர்வாதம் ஹென்றி J. P. அவர்கள் தலைமையில் யா/அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா அவர்கள் மன்றத்தை திறந்துவைத்தார்கள். அன்று பாராளுமன்றப் பிரதிநிதிகளும், அறிஞர்களும் பெரியோரும் சிறப்புரை நிகழ்த்தினார்கள். எமது வளர்ச்சியைக் கண்டு மகிழ்ந்தார்கள், பாராட்டினார்கள். அந்நிகழ்ச்சி இன்றும் என் மனதில் பசுமையாகவே இருக்கின்றது. 10வது ஆண்டு சிறப்பு விழா நடக்கின்ற இவ்வேளையில் தமிழக அமைச்சர்கள், உள்ளூர் அமைச்சர்கள், அறிஞர்க்ள், பெரியோர்கள் எம் மன்றத்தைப் பாராட்டி ஆசியுரைகள், வாழ்த்துக்கள் வழங்குவதைக்கண்டு மகிழ்ச்சியடைகிறோம். அங்கத்தவர்களாகிய நாம் எல்லோரும் மேலும் பொறுப்புக்களை உணர்ந்து எமது எதிர்காலச் சந்ததியினருக்காக ஓர் அளவு தியாகம் செய்யவேண்டும். அப்படிச்செய்தவனல் தான் மறுமலர்ச்சியுள்ள சமூகத்தை எம்மால் உருவாக்க முடியும்.

''ஆற்றுரு மாற்றி யடுப விடனறிந்து
போற்றுர்கட் போற்றிச் செயின்.''

ஒவ்வொரு சமுதாயத்தின் வாழ்வும், தாழ்வும், அவர்களின் கையில் தான் தங்கியுள்ளது. எமது எதிர்காலச் சமுதாயம் மறுமலர்ச்சியுள்ள இலட்சியச் சமுதாயமாக்க வேண்டும் என்பது நமது ஒவ்வொருவருடைய பெரு நோக்காக அமையவேண்டும். பத்து ஆண்டு சேவையின் சிறப்பு விழாவிலே கலந்து கொண்டிருக்கிறோம். இந்நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும் உளம் மலரும் இவ்வேளையில் மன்ற உறுப்பினர்கள் எல்லோரும் திடசங்கர்ப்பம் எடுத்துக் கொள்வோம்.

26-10-74.

ம. வே. பாலசிங்கம்
தலைவர்.

# செயலாளர் ஆண்டறிக்கை

கடந்த ஓராண்டுகாலமாக நமது நிலைய சமூக வளர்ச்சிக்கும், உயற்சிக்கும் ஆற்றிய பணிகளை அறிக்கையாக வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி கொள்கிறோம். நிலையத்தின் நற்பணிகள் எம் நிலையத்திற்கு உயர்ச்சியை வளர்ப்பதோடு சமுதாய முன்னேற்றத்திற்கும் பெரும் பயன் அளித்துள்ளன.

இவ்வாண்டில் நமது நிலைய மொத்த உறுப்பினர்கள் 27 ஆக வளர்ந்துள்ளது. அன்ருடப்பிழைப்பிலே தங்கி இருக்கும் நாங்கள் ஆற்றிய நற்பணிகளை வெளிப்படுத்துவதன் மூலம் பெருமைப்படுகிறோம் இவ்வாண்டிலே புதிய அங்கத்தவர்களாக 3 உறுப்பினர்கள் அங்கம் பெற்றுள்ளனர். மொத்தத்தில் நிலைய நிர்வாகிகளாக 11 உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி வருகின்றது. அங்கத்துவத்தில் மிகக்குறைந்த தொகையினரை உடையபோதிலும் இக்கட்டான இந்நிலையில் நிலையம் எழுச்சியுறத் தன்னாலாய பணிகளை ஆற்றுவது கண்டு வியப்போடு மகிழ்கிறோம்.

இவ்வாண்டு 10 மாதாந்தக் கூட்டங்களும், 9 நிர்வாகசபைக் கூட்டங்களும் நடந்தேறின இவற்றிலே கருத்தரங்குகள், முன்னேற்றமான செயல் திட்டங்களும் தீட்டப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டன. இதன் அடிப்படையில்தான் எம் நிலையம் இச் சிறப்பு விழாவை இன்று கோலாகலமாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

எம்நிலையம் தைப்பொங்கல், சிவராத்திரிவிழாவையும் சிறப்பிக்கும்முகமாக "சிங்ககிரிக் காவலன்" என்னும் சரித்திர நடைகம் நடைபெற்று மக்களின் நன்மதிப்பைப் பெற்றது அதோடு வருடப்பிறப்பு விழா, (தண்ணீர்ப்பந்தல்) நவராத்திரி விழாவும். வான்புகழ் வள்ளுவனுக்கும் விழாவெடுத்தது. இவ்விழாவிலே மன்றத்தாரும், மற்றும் சிறப்புச் சொற்பொழிவாளராக வித்துவான் க. ந. வேலன் அவர்களும் பங்கு கொண்டு சிறப்பித்தார்கள்.

நூல்நிலையம் கடந்த ஆண்டு ஏறத்தாழ பத்திரிகைச் செலவுக்காக 300/-வை செலவு செய்தது. மற்றும் சுதந்திரன் பத்திரிகை நிலையத்திற்குத் தமது செலவிலே சமர்ப்பணம் செய்த செல்வன் ம. வே. பாலசிங்கம் மற்றும் மலேசியன் டயஸ், பிரித்தானிய செய்தி, சோவியத்நாடு போன்ற பத்திரிகைசஞ்சிகைகளை வழங்கி வருகின்ற தூதுவராலயத்தாருக்கும் எம் நிலையத்தாரது மனங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

மேலும் நிலையத்தில் பத்திரிகைகளைப் பெருக்கும் நோக்கத்தினை உத்தேசித்து வருகின்றது.

கடந்த ஓராண்டாக நிலையத்தின் பணிகளைச் செவ்வனே செய்து முடிப்பதற்கு ஆதரவாய் இருந்த நிலைய அங்கத்தவர்களுக்கும், நேர்முகமாகவும், மறைமுகமாகவும், கலந்து பணிபுரிந்த ஏனைய நேயர்களுக்கும் உளம் நிறைந்த நன்றிதனைத் தெரிவித்துக்கொள்கிறோம். மன்றம் விழாக்களையும் விசேட நிகழ்ச்சிகளையும், நிகழ்த்துவதற்கு பொன்னும் பொருளும் வழங்கிய அன்புடையோர்க்கும் விழாவிலே கலந்து கொண்ட பெரியோர்க்கும் மன்றத்தின் சார்பில் நன்றி நல்கின்றோம்.

செயலாளர்கள்
மா. பவானந்தன்.
வே. பாலேந்திரன்.



# தனாதிகாரியின் ஆண்டறிக்கை

மன்றம் எழுச்சியடையவும், அன்றேல் வீழ்ச்சியடை யவும் மூக்கிய காரணங்களில் ஒன்ருய் இருப்பது பொருள் அமைப்புத்தான். பேச்சளவில் எத்தனை விடயங்களைப் பேசினுலும் அதைச் சுலபமாக சாதிக்க வல்லது பணம் தான்.

உலகில் முன்னணியில் நிற்கும் பல நாடுகள் தங்களது பொருளாதார வலிமையைக் கொண்டுதான் சுபீட்சமான நிலைக்கு வந்துள்ளன. இல்லாவிட்டால் சரித்திரத்திலே இவர்கள் சிறு இடத்தைக்கூட பிடித்திருக்க முடியாது.

எமது மன்றத்தைக் கட்டிடமாக அமைத்து, திறப்பு விழாவை வெகு சிறப்பாகக் கொண்டாட முடிந்தது பணத் தினுல்தான். எனவே, இவ்வளவு முன்னேற்றத்துடன் நின்றுவிடாது காலத்தின் போக்கிற்கிணங்க நாமும் படிப் படியாக முன்னேற வேண்டும். அதற்கு எல்லோரது தாராள மனதுள்ள ஒத்துழைப்பு இன்றியமையாதது என் பது சொல்லாமலே விளங்கக் கூடியதாக இருக்கிறது.

இதுவரை காலம் எமது மன்றத்துக்கு நன்கொடை கொடுத்தவர்களுக்கும், பத்திரிகை போட்டவர்களுக்கும், அனுதாபிகளாக இருந்து மன்றத்திற்கு உழைத்தவர்களுக் கும், சிறப்பாக எமது மன்றத்தின் வளர்ச்சிக்கு தினப் பத்திரிகை கொடுத்துதவும், திரு. வ. செல்லையா, செல்வன் ம வே. பாலசிங்கம் என்பவர்களுக்கும் எமது மன்றத்தின் சார்பில் எனது நன்றி உரித்தாகுக.

மா. பசுபதி
பொருளாளர்.

ஆனைக்கோட்டை.
24-1-75

# சன சமூக நிலையம் மக்களுக்குத்

# தேவையா? ஏன்?



பரந்தவுலகிலே பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்களது ஒற்றுமை, வளர்ச்சி முன்னேற்றம் என்பவற்றை நிலைநாட்ட ஒவ்வோர் சனசமூக நிலையங்களையும், இயக்கங்களையும் தொழிற் தாபனங்களையும் ஏற்படுத்தியுள்ளார்கள் என்பது நாம் அறிந்த விடயமாகும். அதேபோல இலங்கை வாழ் மக்களாகிய யாம் எமது கிராம மக்களின் நலன் கருதி ஒற்றுமையுணர்ச்சி முன்னேற்றம் என்பவற்றை மென்மேலும் வளர்ச்சி பெறச் செய்வதற்கு பொது நிலையங்களையும், ஸ்தாபனங்களையும் ஏற்படுத்திச் செயல்புரிய வேண்டியது முக்கிய கடமைகளுள் ஒன்றாகும்.

இந்நிலையங்களில் மக்கள் தங்களது ஓய்வு நேரத்தைச் சந்தோஷமாகக் கழிக்கவும், பத்திரிகைகள் மூலம் வெளிநாட்டு, உள்நாட்டுச் செய்திகளை அறியவும், சிறுகதைகள், கட்டுரைகள், புத்தகங்கள் மூலம் அறிவாற்றலை வளர்க்கவும் வெளி நாட்டு உள் நாட்டு தொடர்புகளையும், உதவிகளையும் பெற்றுக் கொள்வதற்கும் உறுதுணையாகவுள்ளது

"அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு" என்ற பழமொழிக்கேற்ப மக்கள் ஒற்றுமையை வளர்க்கவும், உற்சாகத்துடனும், தைரியத்துடனும் ஒத்துழைப்பை நல்கிச் செயலாற்றவும் கடமை கண்ணியம், கட்டுப்பாடு என்ற விதிகளுக்குள் அடங்கி வாழவும் ஏதுவாகவுள்ளது, அத்துடன் பொது விஷயங்களையும் சிரமதான இயக்கங்களையும் மிகத் துரிதமாகச் செய்து முடிக்க இந்நிலையங்கள் தூண்டுகோலாகவும் உள்ளது

இவ்விடயங்களுக்கு, சனசமூக நிலைய நிர்வாக உறுப்பினர்களோடு அங்கத்தவர்களுடைய ஒத்துழைப்பும் பெரியோர்களது நல்லாசியும் கிராம முன்னேற்றத்திற்கு சிறந்த வழிகாட்டியாக அமையும் என்பது எனது கருத்தாகும்.

ஆகவே, கிராமத்தை முன்னேற்றக் கையாளும் வழிவகைகளுக்கு பொது மக்கள் பார்வையில் செய்யும் சேவைகளுக்கும், பணிகளுக்கும் ஒவ்வோர் கிராமங்களிலும் சனசமூக நிலையங்கள் அமைக்கப்படல் வேண்டும்.

இங்ஙனம்


ஆனைக்கோட்டை.

30-1-75

ச. அப்பையா

முன்னாள் பொருளாளர்.

# மன்ற உறுப்பினர்கள்



**1ம் வரிசையில் இருப்பவர்கள்:**

1. திரு. ச. மாணிக்கம்
2. திரு. ம. தம்புத்துரை
3. திரு. மு. செல்லையா
4. திரு. சி. மார்க்கண்டு J. P.
5. திரு. வே. பாலகிருஷ்ணன்
6. திரு. மு. பாக்கியநாதன்

**2ம் வரிசையில் நிற்பவர்கள்:**

1. திரு. வ. செல்லையா
2. திரு. மா. காணிக்கைச்செல்வம்
3. திரு. பொன். கனகரத்தினம்
4. செல்வன்: கி. சண்முகராசா
5. செல்வன்: ம. வே. பாலசிங்கம்
6. திரு. வ. சரவணமுத்து
7. திரு. வே. நடராசா
8. செல்வன்: ச. சின்னையா
9. திரு க. தணிகாசலம்

**3ம் வரிசையில் நிற்பவர்கள்:**

1. செல்வன் க. தங்கவேலு
2. செல்வன் மா. ஞானப்பிரகாசம்
3. „ வே. பாலேந்திரன்
4. „ கி. சின்னையா
5. திரு. ச. தருமலிங்கம்
6. திரு மா. பசுபதி
7. செல்வன் க. கணபதிப்பிள்ளை
8. திரு. வே. பரமநாதன்
9. செல்வன். க. சண்முகம்
10. திரு. மா. பவானந்தன்

# கடந்தகால நினைவுகள்



எமது சமூகம் பின் தங்கிய காலமது இவை 1949-ம் ஆண்டுக்கு முன் 1950-ல் நமக்கு நல்ல பொற் காலமாய் அமைந்தது. அவ்வேளையில்தான் ஓர் உருவம்தோன்றியது அவர்தான் வ. க. கணேசவேல் அவர்கள். இவர் எமது சமூகமுன்னேற்றத்துக்கும் கல்வி வளர்ச்சி பெற்று சீரும் சிறப்புடன் வாழ வைக்க எண்ணி இன்றைய வாலிபர்களாகிய பெற்றோர்களையும் பெரியோர்களையும் அழைத்து அறிவுரை கூறியநாலும் பெற்றோரின் நற்சிந்தனையாலும் மன்றம் அமைந்தது. ஆனால் நல்ல மனிதர்கள் வாழும் கிராமத்தில் நாலு தீயோர் இருந்தால் அக்கிராமத்தை மாசு படுத்தப்படும் அதுபோல இம் மன்றத்தில் சில பிற்போக்குவாதிகள் இருந்ததினால் இரண்டுடன் ஆயுள் முடிவடைந்தன. அன்று குழந்தைகளாக இருந்த நமக்கு மிக வேதனையைத் தந்தது. 1965-ல் இளைஞர்களாகிய நாம் முன்னேற்றப் பாதைதனை முன்னெடுத்துச் செல்ல வாய்ப்பாக அமைந்தது.

## பத்து ஆண்டுகளில்

எம் மனதில் உதித்தவை பல, சிந்தனையில் தோன்றியவை சில, ஆனால் எண்ணங்களில் சாதித்தவை சில அவற்றில் ஒன்று தான் திருவள்ளுவர் சேவா மன்றம், சன சமூக நிலையம்.

கல்வி கற்றவர்கள் பலர் இருக்கும் நம் கிராமத்தில் கற்காதவர்களும் சிலர் இருக்கிறார்கள். அவர்களை நாமும் சிந்தித்து சில நடைமுறைகளைக் கையாண்டு வளர்ச்சி பெறச் செய்வித்து அவர்களையும் தன்னையும் தனது சுற்று

டல் பலவற்றையும் தெரிந்து கொண்டு வாழ வைப்பது தான் நமது மன்றத்தின் சேவையாகும்.

கல்வி கற்பதனால் அறிவு வளர்கிறது என்று சிலர் கூறுவார்கள். அது பொருந்தாது. கல்வி கற்பதனால் அறிவு வளர்வதில்லை. அறியாமை தேய்கிறது. அறியாமை தேயத் தேய அறிவு விளக்கமுறுகிறது. அரிசி வெண்மையாக வேண்டுமென்றால் என்ன செய்கிறோம்? உலக்கை கொண்டு தீட்டுகிறோம்; ஏன்? அப்பொழுது அரிசியில் மூடி இருக்கும் தவிடு மறைகிறது. மறைந்துள்ள தவிட்டினை அகற்றினால் இயற்கை நிறமாகிய வெண்மை நிறந்தான் வெளிப்படுகிறது. இதுபோல ஆன்மாக்கள் இயல்பாக அறிவுப் பொருளாக இருந்தும் அவ்வறிவை அறியாமை மறைத்து வைத்திருக்கின்றது. மறைத்துள்ள அறியாமை அகற்றி வாழ்வை வளப்படுத்தி முன்னேறிச் செல்வதற்கு உலக அறிஞர்களின் வாக்குகளும், தினசரி புதினப்பத்திரிகைகளாலும் உலக்கை கொண்டு தீட்டும் பொழுது சுயரூபமாகிய அறிவு வெளிப்படுகின்றது. அதுபோல் நாமும் பத்து ஆண்டுகளாக அறிவு வளர்ச்சி பெற்று மற்றவர்களுக்கும் பெறப்பாடுபடும் இந்த உண்மையை மற்றவர்களும் உணர்ந்து தங்கள் சமூகத்துக்கு ஓர் வழிகாட்டியாக துலங்கும் பணியாய் இம்மன்றம் அமைகிறது. இந்த நிலையத்திற்கு தொண்டு செய்தவர்களும், செய்பவர்களும் இருக்கின்றனர். இளஞ் சந்ததியினர் யாவர்க்கும் இந்த பத்தாவது ஆண்டு பெரும் வெற்றியை ஈட்டித் தந்துள்ளது. விழாவினை கொண்டாட சிறியோர் முதல் பெரியோர் வரை ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் செயல்படுகிறார்கள். எனவே விழாக்குழுத் தலைவர் என்ற முறையில் நானும் எனது கடமையைச் சரிசெய்து இந்த மன்றம் ஆக்கமும், ஊக்கமும் பெற இறைவனைப் பிரார்த்தித்து சேவை மனப்பான்மையை மேலும் வளர வாழ்த்துகிறேன்.

ஆனைக்கோட்டை.

வே. பாலகிருஷ்ணன்
விழாக் குழுத்தலைவர்.

# குறளே குரு

பேரன்புமிக்க பெரியோர்களே, தாய்மார்களே, இளைஞர்களே. குருவில்லா வித்தைபாழ் என்று பெரியோர்கள் கூறுவதைக் கேட்கிறோம். அவை தவறென்று நான் சொல்லவரவில்லை. ஆனால் எமது மன்றத்தின் பத்தாண்டு வளர்ச்சியிலே எங்களுக்கும் மன்றத்திற்கும் குருவாகவோ, அன்றி வழிகாட்டியாகவோ எவரும் இருந்ததில்லை. தன்கையே தனக்குதவி என்பார்கள் பெரியோர்கள். இதன்படி நாம் ஏன் வாழக்கூடாது. என்கின்ற கேள்வியின் கீழ் எம்மை நாம் ஒன்றுபடுத்தி வளர்த்துக் கொள்வதற்கு எமக்கென ஓர் இயக்கம் வேண்டும் என்கின்ற எழிற்சி இளைஞர் இதயத்தில் உதயமாகியது. இதன் காரணமாக தெய்வப்புலவர் திருவள்ளுவர் திருவாய் மலர்ந்தருளிய மனிதசமுதாயத்தின் மாண்புமிகு சொத்தான குறளமுதை குருவாகவும், வழிகாட்டியாகவும் கொண்டு 1965-ம் ஆண்டு உருவானது எங்கள் திருவள்ளுவர் சேவா மன்றம். எங்களில் பட்டம் பெற்றவர்கள் இல்லை, படித்த ஒருசில இளைஞர்கூட ஏனோ ஒதுங்கி வாழ்கிறார்கள். இந்த நிலையில் சமுதாய வளர்ச்சிக்காக இரவு பகல் பாராது உழைப்பவர்கள் கடைந்தெடுத்த தொழிலாளர்களே என்பதை பெருமையோடு கூறிக்கொண்கிறேன். எம்மை மற்றவர்கள் அறியவைத்த பெருமை மன்றத்திற்கு உரியது.

எமது மன்றத்தை வளர்ப்பதற்கு எல்லைமீறிய பேராவல் காரணமாக வளர்ச்சிக்குரிய, திட்டங்கள் தீட்டுதற்காக எங்கள் வீடுகளில் ஆலோசனைக்கூட்டம் கூடுவோம். பல மணி நேரமாக போராடி பயனுள்ள பல திட்டங்களை உருவாக்குவோம். அன்றே எமது பெற்றோர்களின் வெறுப்பிற்கு ஆளாவோம். இப்படியே சில காலம், பின் தனி இடம் தேடினோம் அங்கும் ஐயகோ! இயற்கை எமக்கு எதிராளி ஆனது. ஆம்! பனி, மழை அப்பொழுது எங்களுச்கு தஞ்சமளிப்பது பனை, தென்னை மரங்களே. இதோடு பக்கத்து வீட்டார் எமக்களித்த பெயர் பைத்தியங்கள், இருந்தும் நாம் சளைக்கவில்லை. மாறாக எம்மை அதி தீவிரம் அடையைச் செய்தது. அதன் பலன் தியாகச்சுடராம் திரு வே. பாலகிருஷ்ணன் என்னும் பெரியார் அவர்கள் எமது மன்றம் அமைப்பதற்குரிய காணி நன்கொடையாக வாங்கியதோடு கட்டிட நிதியாகவும் தமது பங்கை செலுத்தியுள்ளார். இளைஞர்கள் சக்தி ஒன்றுதிரண்டது இரவு பகல் என்று இல்லாமல் இரண்டுவாரங்களில் வேலைகள் யாவும் பூர்த்தியாகி மன்றக் கட்டிடம் முழுமை பெற்றது 1968-ம் ஆண்டு அப்பொழுது வடமானில அரசாங்க அதிபராக இருந்த உயர் திரு. வேணன் அபயசேகரா அவர்கள் திருவள்ளுவர் சேவா மன்றத்தை திறந்து வைத்த பெரியார் ஆவர். திறப்புவிழா வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது என்பதைப் பெருமையுடன் கூறுவதோடு அன்றுதான் எங்கள் பெற்றோராலும், எம்மை பயித்தியம் என்று பட்டம் சூட்டிய மற்

ரோராலும் பாராட்டப் பட்டோம், பரவசம் அடைந்தோம். மயக்கம் காரணமாக மன்றத்தை சேயாகக்கொண்டு ''ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன், எனக்கேட்ட தாயானோம்'' பேரானந்தம் அடைந்தோம்.

மீண்டும் சேவை திட்டம் இப்படியே வளர்ந்து 10-வது ஆண்டு நிறை விழாவைப் பலரறிய கொண்டாடுகிறோம் என்றால் இளைஞர்கள் எல்லோரும் எந்த அளவிற்கு உழைத்திருக்கிறார்கள் என்பது புலனாகும். இவற்றில் திரு. வே. பாலகிருஷ்ணன் சகோதரர்களின் சேவை முதன்மையானது. அவர்களின் அளப்பரிய சேவைக்கு மன்றத்தின் சார்பில் நாம் என்றும் கடமைப்பாடுடையோம்.

இன்று உலகிலே எத்தனையோ மன்றங்கள் இருக்கின்றன. எத்தனையோ இருந்த இடமும் தெரியாமல் மறைந்து விட்டன. இவற்றில் எல்லாம் பல கோஷ்டிகள் பதவிக்கு, போட்டிக்கு பலன், பரிதாபத்திற்குரிய மூடுவிழா, இது ஒரு காரணம் பல கட்சிகள் இதனால் பல பிளவுகள் இப்படிப் பல காரணங்களால் பல மன்றங்கள் தோன்றி மறைகின்ற வேளையில், எமது மன்றம் 10-வது ஆண்டு விழாவைக் கொண்டாடுவதென்றால் இதில் பரம இரகசியம் இல்லாமல் இல்லை. ஆம் எனைப் பொறுத்தமட்டில் எங்களிடத்திலே சினிமாக் கட்சியோ அல்லது அரசியல் கட்சியோ எதுவானாலும் மன்றத்திற்கு வெளியில்தான். அடுத்து மன்றத்துக்குள் ஆளும் கட்சியோ அன்றி எதிர்க்கட்சியோ இல்லை. பதவி ஆசை எவருக்கும் இல்லை.

இவர்தான் தலைவர், இவர்தான் செயலாளர் என்கின்ற விதி எம்மிடம் இல்லை. எல்லோரும் எல்லா நிர்வாகத்தையும் ஏற்று எம்மை வழி நடத்தவேண்டும். இதன்படி 27 அங்கத்தவர்களும் எல்லா நிர்வாகப் பொறுப்புக்களையும் ஏற்றிருக்கின்றோம் இப்படியே எங்கள் மானசீகக் குருநாதன் தந்த குறளமுதம் உண்டதால் எமக்கு நாமே வழிகாட்டிகளாக இருந்து பத்து ஆண்டுகள் வாழ்ந்து விட்டோம் என்று பெருமையோடு கூறுவதைவிட இன்னும் பல்லாண்டு வழி வழியாக வாழுவோம் என்று பரமனின் திருவருளால் கூறி விடை பெறுகின்றேன்.

வணக்கம்

மு. பாக்கியநாதன்
இணைப் பொருளாளர்.

ஆனைக்கோட்டை.

## 15–1–1968ல் நடைபெற்ற
# திறப்பு விழா வைபவங்களில் சில நிகழ்ச்சிகள்

(1) (2)



(3) (4)

1. திரு. மு. பாக்கியநாதன் (மன்றத் தலைவர்) அவர்கள் உரை நிகழ்த்துகிறார்.
2. கௌரவ திரு. வேர்ணன் அபயசேகரா (அரசாங்க அதிபர்) அவர்கள் திரைநீக்கம் செய்து வைக்கிறார்.
3. சிவத்தமிழ்ச் செல்வி: தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் உரை நிகழ்த்துகிறார்.
4. கௌரவ திரு. வேர்ணன் அபயசேகரா G. A. அவர்கள் நாடாவை வெட்டி நிலையத்தைத திறந்து வைக்கிறார். அருகில் நிற்பவர் விழாவிற்கு தலைமைதாங்கிய திரு. ஆசிர்வாதம் ஹென்றி J. P. அவர்கள்

# நிறைவு விழாவின் பின்-வெள்ளிவிழாக்

## காண்போம்

அன்று நாம் எடுத்த விழா ஆரம்பவிழா அறிமுகவிழா
ஆனைக்கோட்டையில் நாங்கள் அறியாத விழா
இன்று நாங்கள் எடுக்கும் இன்பவிழா இனியவிழா
பத்தாண்டு காலமும் நாம் பண்போடு நினைந்த
நிறைவுவிழா
ஆனந்த வருசத் தைத்திங்கள் நந்நாளில்
நாம் நன்மையுடன் எடுக்கும் விழா
இவ்விழா எடுப்பதற்கு இன்முகத்துடன் சேவை செய்த
சேவையாளரை நாம் நினைவில் கொள்வோம்
உண்மையுள்ள உறுதியுடன் செயற்பட்ட
உண்மைத் தலைவன் பாலசிங்கம்
ஊக்கமுடன் சேவை செய்த சேவையாளன்
செயலாளன் தம்பி செல்வன்-பாலேந்திரன்
எந்நிலையிலும் கடமை தவறுத எண்ணமுள்ள
எம்மன்றப் பொருளாளர் பசுபதி
ஏற்றமுடன் சேவை செய்யும் எம்மன்ற
உதவி நிர்வாகசபை உறுப்பினர் உதவியோடு
நாம் எடுக்கும் நிறைவு விழாவைப் போல்
இன்னும் பதினைந்து ஆண்டின் பின்
ஏற்றமுடன் நாம் எடுப்போம் வெள்ளிவிழா
இதைக் கவிதையில் நான் எழுதி
கருத்துள்ள கவியினை முடிக்கிறேன்.

வணக்கம்

ஆனைக்கோட்டை — பொன் கனகரத்தினம்
2-2-75.

# சேர்வோம் நாம் மன்றத்தில்

மன்றம் ஒன்று எங்களுக்கு வேண்டும் என
சிந்தித்தார் ஒரு சிலர்!
எங்கிருந்தோ வந்தவர்கள் நாங்கள்
எங்களுக்கு இது ஏன் என்றார் வேறுசிலர்
எங்கிருந்து வந்தாலும் நாம் எல்லோரும்
ஓர் மக்கள் தானே என்றார் இன்னும்சிலர்
பலன் காணுமல் இரண்டு ஆண்டிற்குள் பாதியிலே
போய்விடவே!
இவர்களும் நடாத்தக் கூடியவர்களா?
என்று கேலிசெய்தார் எஞ்சியுள்ள சிலர்
எல்லோரும் இப்படியே பல காலம் இருந்தபின்பு
தோன்றினர்கள் படித்த வாலிபர்கள்
தொடங்கினர்கள் ஓர் மன்றத்தை
வழி நடத்தினர்கள் ஒழுங்குடனே
அப்போதும் பைத்தியக்காரர்கள்
பனியில் நனைகிறார்கள் என்றார்கள்
மழையில் நனையும்போது மடையர்கள் என்றார்கள்
இதையெல்லாம் பொருட்படுத்தாமல்
ஈராண்டு காலத்தில் கட்டினேம் ஓர் நிலையத்தை
முறைப்படுத்தினேம் சிறப்புடனே
வெறும்பேச்சு பேசினேர் எல்லாம் வாய் அடைத்து
[நிற்க
திறப்பு விழாவினைச் சிறப்புனே செய்திட்டோம்
இப்போ படிப்படியாகப் பலர் வந்து சேர்கிறார்கள்
மன்றத்தில் இப்படியே எல்லோரும்
சேரவேண்டும் எனக்கூறி முடிக்கிறேன் என்
கவிதைதனை.

வணக்கம்

பொன். கனகரத்தினம்.

ஆனைக்கோட்டை,
1-2-75.

# குடும்பக்கட்டுப்பாடு ஏன்

# கடைப்பிடிக்கப்பட வேண்டும்?

இன்று நம்மை எதிர்நோக்கியுள்ள பிரச்சனைகள் பலவாக இருந்தபோதிலும் முக்கிய பிரச்சனையாகத் திகழ்வது குடிசனப்பெருக்கமே. மண்ணிற்கு மனிதன் வந்தவுடன் அவனை நோக்கி உணவு, உடை, உறையுள், கல்வி சுகாதாரம் போன்ற இன்னோரன்ன பிரச்சனைகள் தோன்றுகின்றன. இவ்வாறான பிரச்சனைகளை யாம் முன்போல் இலகுவாகத் தீர்த்துக்கொள்ள முடியாது. கடந்த காலம் கடந்த காலமேதான். இன்று மக்களின் பெருக்கம் நிமிடத்துக்கு அறுபது பிள்ளைகளுக்குமேல் பிறக்கின்றன என்றே பொருளியல் புள்ளி விபரம் புலப்படுத்துகிறது.

இவ்வளவிலாப் பெருக்கத்திற்கு அரசாங்கமே முடிவு காணும் என்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. அவற்றிற்கு முடிவு காணும் பொறுப்பு மக்களுடையதே. மக்களின் பொறுப்பென்று கூறும்பொழுது நாம் வேறு அரசாங்கம் வேறு என்று பிரித்துக் கூறுவது ஏற்புடையதொன்றல்ல. எனவே எம்மிடம் இயல்பாகவே சில கட்டுப்பாடுகள் இருத்தல் அவசியமாகும். இவ்வாறு கட்டுப்பாடு இருக்குமென்றல் அரசு குடும்பக்கட்டுப்பாட்டை அமுல் செய்தல் அவசியமாக இருக்கமுடியாது. பொதுவாக எம்போன்ற நாடுகள் முழுமையான பொருளாதார வளர்ச்சி பெற்ற நாடுகளெனக் கூறிவிடமுடியாது. இந்நிலையில் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பண்டங்களின் அளவைவிட அதனை அனுபவிக்கும் ஜனங்களின் தொகை வெகுவாகப் பெருகிச் செல்கின்றன. இவ்வேளையில் உதிக்கின்ற குழந்தைகளின் தேவைகள் புதிதாகத் தோன்றுகின்றன. இதனால் எம் போன்ற பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுகள் பேராபத்தை நோக்கிச் செல்கின்றன. இவ்வாறான பிரச்சனைகளுக்கு ஆறறிவு கொண்ட நாம் தீர்க்க வேண்டிய வழி என்னும் வினாவுக்கு தக்க விடையளிக்க வேண்டிய இக்கட்டுக்குத் தள்ளப்பட்டுள்ளோம். மொத்தத்தில் தீர்க்கமான ஓர் முடிவுக்கு நாம் வரவேண்டுமாயின் நாடென்னும் வீட்

டில் கட்டுப்பாடென்னும் திட்டத்தில் இயங்க வேண்டியது மிகமிக அவசியமாகி விட்டது.

பொருளாதார ஆய்விலும் சரி நடைமுறையிலும் சரி நாம் இன்று திட்டமிட்ட பாதையில் செல்வது தவிர்க்க முடியாதிருக்கின்றது. அகில உலக நாடுகளிலும் இன்று உணவுப் பிரச்சனை கொடிகட்டியே பறக்கிறது. ஊட்டம் உள்ள உணவுகள் மிகவும் அரிதாகிவிட்டன. இதனால் சாதாரண ஓர் சுகதேசிக்கு ஏற்படும் நோய்களை எதிர்க்கவல்ல ஜீவ சத்துக்கள் தேவையான அளவிற்கு உருவாகா நிலை ஏற்படுகின்றது. உதாரணமாக ஒரு குடும்பத்தார்க்கின்று கிடைக்கின்ற ஒரு றுத்தல் பாண் மூவருள்ள குடும்பத்தில் ஓரளவு ஒருநேர உணவிற்குக் காணக்கூடுமாயின் அதே அளவு பாண், மூன்றிலும மேற்பட்ட அங்கத்தவருள்ள குடும்பத்திற்கு எப்படிப் போதுமானதாகும்? இவ்வாறான நெருக்கடியினால் சில குடும்பங்கள் பட்டினி இருக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இதனாலே சமீபத்தில் தோன்றிய கொலரா, வாந்திபேதி போன்ற நோய்கள் ஏற்பட்டன என்று சில வைத்தியர்கள் கூறுகின்றனர்.

இவ்வேளையில் அத்தியாவசியமான தேவைகளைத் தமது வருமானத்துடன் எத்தனையோ குடும்பங்கள் வாழ்க்கையில் விரக்தி அடைந்துள்ளனர் தம் பச்சிளம் குழந்தைகளைச் சரிவரக் கவனிக்கமுடியாத பட்சத்தில் தம் உயிரை நீக்கிய குடும்பங்களைப் பற்றிப் பத்திரிகைகள் மூலமும் வானொலி மூலமும் அறிகிறோம். அளவுக்கதிகமாகக் குழந்தைகளைப் பெறும் தாய்மார்கள் தங்களின் நிறைவான ஆரோக்கியத்தினை இழந்து விடுகிறார்கள். மற்றும் இன்று நிலவும் வேலையில்லாப் பிரச்சனை, வீட்டுப் பிரச்சனை, சமூகப்பிரச்சனை மத்தியில் தொழிலாற்றும் பல தொழிலாளர்கள் அரை குறைப் போசனத்துடன் எட்டு மணித்தியாலத்திற்கு மேலாக உழைத்தும் முன் போல் மகிழ்ச்சியான வாழ்வை அனுபவிக்க முடியாது தவிக்கின்றார்கள்.

''அளவுள்ள குடும்பம் ஆரோக்கியமுள்ளதாகத் திகழும்'' எனவே நம் குடும்பத்தினை நாம் மட்டுப்படுத்திக் கொள்ளத் தயாராக வேண்டும். இதன் மூலம்தான் இன்றைய பிரச்சனைகளுக்கு நாம் விடிவு காணமுடியும். இதன் மூலம்தான் வீட்டிற்கும் குறிப்பாக நாட்டிற்கும் பயனுள்

ளவர்களாகத் திகழமுடியும். எனவே அளவிற்கு அதிகமான பிள்ளைகள் இருப்பது பிரச்சனைகளை மேலும் வளர்ப்பதுபோன்றது. அத்தோடு அக்குடும்ப பிள்ளைகளின் தேவைகள் முற்றாகப் பூர்த்தி செய்ய முடியாத நிலை உருவாகின்றது. இவ்வாறான பாதிப்பு அக்குழந்தைகளின் வருங்கால வாழ்விற்கும் முன்னேற்றத்திற்கும் விதிவிலக்கானவர்களாகின்றனர். எனவே நாம் இன்று நிதான புத்தியுடன் செயல்படுதல் அவசியமாகின்றது இந்நிதானத்தை நாம் இழப்போமானால் எம்மை நாம் மக்களென்று கூறமுடியாது. ஆகவே மக்களென்ற கூற்றிற்கு நாம் இலக்கணமாக விளங்கவேண்டுமாயின். இனியாயினும் அளவுள்ள குடும்பமாகத் திகழவேண்டும். இதனை இன்று எமதரசாங்கம் செய்தித் திரைப்பட மூலமும் வானொலி சேவை மூலமும் வலியுறுத்திய வண்ணமிருக்கிறது. இதனை நாம் சிரமேற்கொண்டு செயல் படுவோமாயின் நிச்சயம் நாம் சுகவாழ்வை பெற முடியும்.

வணக்கம்.

செல்வன் சி. இராசதுரை,
உயர்தரம் (கணிதம்)
மானிப்பாய் இந்துக் கல்லூரி.

''அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்''

# மக்களும் மன்றத்தின் தோற்றமும்

''ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அது சான்றோர்
மாற்றாரை மாற்றும் படை''



ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரே சமூகமக்களாக இருந்தும் பலபல பிரிவுகளாக ஒற்றுமையில்லாமல் எமது சமூக மக்கள் இருந்தார்கள். இவ்வேளையில் ஒருசிலர் முயற்சி செய்து 1950-ம் 52-ம் ஆண்டளவில் ஓர் மன்றத்தை தொடக்கி 2 ஆண்டு காலமாக நடாத்தி வந்தார்கள். ஆனால் மேற்குறிப்பிட்ட பிரிவினை காரணமாக அம்மன்றம் மேலும் நடைபெறாமல் தடைபடவேண்டி ஏற்பட்டது. இப்படியே பத்து ஆண்டுகள் உருண்டோடியபின் 1965-ம் ஆண்டில் படித்த வாலிபர்கள் ஒருசிலர் குறிப்பாக, க. இராசநாயகம், ம. வே. பாலசிங்கம் ஆகியோர் முன்நின்று, எமது சமூக மக்கள் அனைவரையும், பெரியோர்கள் உட்பட அழைத்து, எமக்கு மன்றம் இருக்க வேண்டிய அவசியத்தையும், ஒற்றுமையின் அத்தியாவசியத்தையும், மன்றத்தை நடாத்த வேண்டிய வழிவகைகளையும், அங்கத்தவர்கள் ஒழுங்கு முறையை யாப்பாகவும் எழுதி அதன்படியே அங்கத்தவர்கள் நடந்துகொள்ள வேண்டும் எனப் பணித்தனர். அதை நாம் எல்லோரும் ஏற்றுக்கொண்டு கைச்சாத்திட்டு ஒற்றுமையுடன் மன்றத்தை வழிநடாத்த உறுதிபூண்டு செயற்பட்டோம்.

ஓர் ஆண்டு முடிவடையும் கட்டத்தில் நிலையம் அமைக்கத் திட்டம் உருவாகியது. ஆனால் இடம் இல்லாத பிரச்சினையைப்பற்றிச் சிந்திக்கும் வேளையில் அப்போது எம் மன்றப் பொருளாளர் பதவியை மேற்கொண்டு

கடமையைத் திறமையுடன் நடாத்திவந்த திரு. வே. பாலகிருஸ்ணன் அவர்கள் முன்வந்து நிலையம் அமைப்ப தற்கு இடமும், பொருளாதார உதவியும் செய்து ஊக்க மளித்தார்கள். அதன் பலனாக 1968-ம் ஆண்டு நிலையத் தைக் கட்டி முடித்து. அதே ஆண்டு தைத்திங்களில் நிலையத் திறப்புவிழாவையும் அப்போதய வடமாநில அர சாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா அவர்களால் எம்நிலையம் திறப்புவிழா செய்யப்பட்டது. விழாவைத் திரு. ஹென்றி ஆசீர்வாதம் அவர்கள் தலைமையில் சிறப் பாகக் கொண்டாடினோம்.

அன்றிலிருந்து இன்றுவரை மேலும் பல வாலிப அங் கத்தவர்களைச் சேர்த்து சிறப்புடன் நடாத்தி வருகிறோம். மீண்டும் ஒருசில பிரச்சனைகளால் மன்றத்தைச் சீர்குலைக் கும் நிலைமைகள் ஏற்பட்டாலும் அப்பிரச்சனைகளுக்கெல் லாம் மன்றம் செவிசாய்க்காமல் எந்த முற்போக்கான இன ஒற்றுமையான கொள்கையுடன் வழிமுறைப்படுத்தி இன்று பத்தாவது ஆண்டு நிறைவுவிழாவைக் கொண் டாடுகிறோம். அதைப்போல பல்லாண்டு காலமும் ஒற்று மையுடன் எம் மன்றமும், எம் சமூக மக்களும் வாழ வேண்டும் என்று இறைவனை வேண்டி, ஒன்று பட்டால் உண்டு வாழ்வு நம் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு எனக்கூறி என் அன்புநிறைந்த உண்மைக் கட்டு ரையை முடித்துக் கொள்கிறேன்.

வணக்கம்

இங்ஙனம்
பொன். கனகரத்தினம்
மன்றப் பரிசோதகர்

---

''இரவா ரிரப்பார்க்கொன் றிவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்''

# திருக்குறள் எழுந்த சூழ்நிலையும்

## திருக்குறளும்

"நெடியோன் குன்றமும், தொடியோள் பௌவமும் தமிழ் வரம்பறுத்த தண்புனல் நன்னாட்டு" என சிலம்பு தந்த இளங்கோவால் வரையறுக்கப்பட்ட தமிழகத்தின் வரலாற்றில் சங்கமருவிய காலம் மிக்க பெருமையுடையதாகும். உலகம் போற்றும் உத்தம நூலாகிய திருக்குறளையும், உயர் எண்ணங்கள், சிந்தனைகள் பொருந்திய உன்னத நூல்களையும் உவந்தளித்தது இக்காலமாகும். அறநெறிகள், அறவாழ்க்கைகள் என்பனவற்றைப் போதிப்பதே இலட்சியமாகக் கொண்ட இந்நூல்கள் இன்றுவரையும் மக்கள் மனதில் மலர்ச்சியினை மாண்பினை, அறிவினை, ஆக்கக்கருத்தினை, சிந்தனையினை, சீரினை விதைத்து வருகின்றன எனில் அது மிகையாகாது. இவை உயர்ந்த நெறிகளை இலட்சியமாகக் கொண்டமைக்கு இவையெழுந்த காலச் சூழ் நிலையே வித்தாக அமைந்தது.

"ஒரு கால இலக்கியம் அக்காலப் பிரச்சனையையே அடிப்படையாகக் கொண்டிருக்கும்" என்ற ஆராய்ச்சியாளரின் முடிபுக்கு இலக்கணமாக இக்கால நூல்கள் இருக்கின்றன. பொங்கும் ஆர்வத்தினால் பங்கம் சிறிதுமின்றி, சங்கெடுத்து, சங்கம் அமைத்து சிங்கத் தமிழர் தமிழ் வளர்த்த காலமே சங்ககாலமாகும். இதில் முதற் சங்கம் 4400ம் ஆண்டும், இடைச்சங்கம் 3700ம் ஆண்டும், கடைச் சங்கம் 1800ம் ஆண்டும் என களவியல் உரையாசிரியர் குறிக்கின்றார். சங்ககாலப் பிற்பகுதியும், சங்கமருவிய கால முற்பகுயுமே இப்பிரச்சனைகளுக்கு களமாக அமைந்தன. சங்ககால வாழ்க்கை அகம், புறம் என வகுக்கப்பட்ட போதும் பல வழுக்களைக் கொண்டிருந்தது. அச்சமுதாய முறையில் பண்பற்றவை பண்புகளாகின. நெறியில்லாதவை நெறியாயின இவ்வுலக இன்பமே இனிது என, இயங்கியதால் இக்கால இலக்கியங்கள் சமுதாய ஏற்றத்துக்கான எழுச்சிக்கான ஏற்ற கவிதை படைக்கவில்லை அறிவுரைகள் காதல், வீர நிகழ்ச்சிகளில் இழையோட விடப்பட்டாலும் அவைகளின் பயன் சொற்பமே. நிலையானவைபற்றிச் சிறிதும் நினைவு இன்றி, நினைவுகளை இவ்வுலக இன்பங்களில் செலவிட்டு, காதலும், வீரமுமே கண்களெனக் கொண்டு, பரத்தையர் இன்பமே மருதநிலத்தாரின் மறக்காத இன்பமெனக் கூறி மறக்கருத்துக்கள் பாடிய இலக்கியங்கள் பல. புணர்தல், பிரிதல், இரங்கல், இரத்தல் ஊடல் என அக ஒழுக்கங்களையும், வெட்சி, வஞ்சி, வாகை, உழிஞை, தும்பை என புற ஒழுக்கங்களையும் வகுத்த தமிழ்மரபு அறிவுக்காக, ஆத்மீக வளர்ச்சிக்காக ஒருமுறைகளையும் வகுக்கவில்லை இவற்றின் விளைவே சங்க மருவிய காலத்தில் இவற்றைச் சாடிய நூலான திருக்குறள் எழக் காரணமாயின.

சங்கமருவிய கால முற்பகுதியில் அரசியல் முறையிலும், சமயரீதியிலும், சமுதாய நிலையிலும், பண்பாட்டு வழியிலும் பல மாறுதல் புகுகின்றன. "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற தமிழ் மரபில் வடநாட்டார் செல்வாக்கு ஏற்படுகின்றது. இதனால் ஒன்றாக இருந்த தமிழ் சமுதாயத்தில் உயர்ந்தவர், தாழ்ந்தவர், பிராமணர், வைசியர், சத்திரியர், சூத்திரர் எனப் பலவகையான சாதி வருண ஏற்றத்தாழ்வுகள் உருவாகின்றன. களப்பிரர் சாதியினர். தமிழரை முதன்முதலாக அடிமையாக்கி ஆளத்தொடங்கினர். அந்நியர் ஆட்சியில் அன்னைத் தமிழ்மொழி பல மாறுதல்களை ஏற்றது தமிழர் வாழ்வில் ஓர் இருளடைந்த நிலை உருவாகின்றது. பௌத்தம், சமணம் போன்ற சமயங்கள் தமிழ்நாட்டில் எழலாயின. இவை தமது வளர்ச்சிக்காக பல சங்கங்களை உருவாக்கின. காலப்போக்கில் சமயங்களிடை போட்டி ஏற்பட்டது. பல நூல்கள் பிரசார நோக்கமாக எழலாயின. தமிழர்கள் அரசியல் பிரச்சினையாலும், மொழிப்பிரச்சினையாலும், சமயப்பிரச்சினையாலும், சமுதாயப் பிரச்சினையாலும் திசை அறியாது, வழிபுரியாது வதங்குகின்றனர். சங்கம் வளர்த்து தமிழை எங்கும் பரப்பிய தமிழர் இலட்சியம் எதுவுமின்றி மங்கத் தொடங்குகின்றனர். மணிமுடியிலிருந்த மாணிக்கம் மண்ணில் புரளுகின்றது. விண்புகழ் கொண்ட சமுதாயத்தில் மண்மூடிப் போகின்றது.

இந்நிலையில் புரியாத இலட்சிய வாழ்வைப் புரியவைக்க, அறியாத அறிவு வாழ்வை அறியவைக்க, தெரியாத அரசியல்முறையைத் தெரியவைக்க, விளங்காத அன்பை விளங்கவைக்க ஒப்பற்ற பல நூல்கள் உதயமாகின்றன. அவை மக்களுக்கு இதுதான் வழியென எடுத்துரைக்க, இடித்துரைக்க, அவர்தம் துன்பத்தை துடைத்தெடுக்க ஏற்றமிகு நிலையை அடைய ஏணிகளாக அமைந்தன; திசையின்றி இணறும் தீந்தமிழுக்குரியோரை, வருங்கால வசையின்றி, இசைகொண்டு நற்றிசைக்குத் திருப்ப முயன்றன. நிலையாமையை இவை இடித்துரைத்தன. நிலையான இன்பங்களை எடுத்துரைத்தன. வாழும் வழிகளை இவை வகுத்துக்காட்டின. மாளும் தீநெறிகளை வழியனுப்பின. உணர்ச்சியின்பங்களை உரைக்க மறுத்தன. கணக்கற்ற போதனைகளை காட்டி நின்றன. மது, மாது, மாமிசங்களை மறக்கச் சொல்லின மறையாத இன்பத்தின் மாண்பைக் காட்டின. வருணனைகள் அங்கு இடம்பெறவில்லை. வரனில்லா அறிவுரைகள் இடம் பெற்றன கன்னியரின் கட்டழகுபற்றி காவியம் பாடவில்லை. கல்வியின் பெருமைக்காக கவிதைகள் பல புனைந்தன

''இடைவனப்பும், தோள்வனப்பும் மீடின் - வனப்பும்
நடைவனப்பும், நாணின் வனப்பும் - புடைசால்
கழுத்தின் வனப்பும் வனப்பல்ல! - எழுத்தோ
டெண்ணின் வனப்பே வனப்பு''

இத்தகைய சூழ்நிலையில் இவ்வாறான தன்மைகளுடன் தோன்றிய நூல்களில் ஒன்றே திருவள்ளுவப் பெருந்தகையின் திருக்குறளாகும்.

திருக்குறள் "அந்நிலை மருங்கின் அறமுதலாகி மும்முதற் பொருள்" என்ற தொல்காப்பியச் சூத்திரத்தின் அடிப்படையிலேயே உருவாகியதென்பர். அறம், பொருள், இன்பம் வீடு ஆகிய நான்கு உறுதிப் பொருட்களிலும் முதன் மூன்றே இங்கு கூறப்படுகின்றது. இவை வழியே சென்றால் நான்காவது உறுதிப் பொருள் தானாகவே கிடைக்கும் என்பது அதன் பொருளாம். அவசரமான சூழ்நிலை அறிவினைப் போதிக்க எழுந்ததாக தேவையற்ற வருணனைகள் உவமைகள் இடம்பெறவில்லை அகவல், வஞ்சி போன்ற வருணனைப் பாவகைகள் கைவிடப்பட்டு வெண்பா யாப்பு இதனாலேயே கைக்கொள்ளப்பட்டது. "சுருங்கிய சொல் விரிந்த பொருள்" திருக்குறளின் அடிச்சுவடாக உள்ளது. இது முன்னர் ஒழுக்க மற்றவைகளைக் கண்டிக்கின்றது. "பிறனில் விழையாமை" அதிகாரம் பரத்தையர் இன்பம் விழைதலைக் கண்டிக்கவே எழுந்ததென்பர்.

இது 133 அதிகாரங்களை 1330 பாக்களையும் கொண்டிருப்பதோடு, அதிகாரங்கள் வைக்கப்பட்ட முறைமை ஒன்றுக்கொன்று தொடர்புடையது. குறட்பாக்களால் ஆன இந்நூலுக்கு "திரு" என்ற அடைமொழி. அதன் உயர்வு கருதியே வழங்கப்பட்டிருத்தல் வேண்டும் முன்னைய நூலான தொல்காப்பியத்தின் பகுதிகளில் சில திருக்குறளிற் கையாளப்பட்டுள்ளன. தொல்காப்பியத்தின் எழுத்தெனப்படுவது "அகர முதலன கர இறுவாய்" என்பது "அகர முதல எழுத்தெல்லாம் எனவும், நிறை மொழிமாந்தர் ஆணையிற் கிளந்த" என்பது "நிறை மொழி மாந்தர் பெருமை" எனவும் நிலத்தீ நீர்வளி விசும்போடடைந்தும்" என்பது "சுவை யொளியூறு ஓசை" எனவும் திருக்குறளில் கையாளப்பட்டுள்ளது. தொல்காப்பியத்தைப் போல் 'கள்' விகுதி அஃறிணையில் கையாளப்படாது உயர்திணையில் கையாளப்பட்டுள்ளது அல்லால், சூழாமல் போன்ற புது வழக்குகள் திருக்குறளில் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக பதட்டமான சூழ்நிலையில் பிறந்து, பார்புகழும் அறிவு விருந்தினை நல்கிக் கொண்டிருக்கும் திருக்குறளின் பெருமையை, தன்மையை, உயர்வினை விரித்தால் பெருகும் தொகுத்தால் எஞ்சும்.

வீ. ரவீந்திரராஜ்
பல்கலைக்கழக புகுமுக மாணவர்

## 15-1-1968ல் நடைபெற்ற
## திறப்பு விழா வைபவங்களில் சில நிகழ்ச்சிகள்

(1) (2)



(3) (4)

1. கௌரவ திரு. வேர்ணன் அபயசேகரா அவர்கள் உரை நிகழ்த்துகிறார் (அரசாங்க அதிபர்) அருகே மொழிபெயர்ப்பவர் மாணிக்க நடராசா (முன்னாள் வலி-மே. காரியாதிகாரி)
2. திரு. மாணிக்க நடராசா (வலி-மே. காரியாதிகாரி) அவர்கள் உரை நிகழ்த்துகிறார்.
3. திரு. வே. பாலகிருஷ்ணன் (மன்றக் கணக்குப் பரிசோதகர்) அவர்கள் உரை நிகழ்த்துகிறார்.
4. திரு. வி. தர்மலிங்கம் (பா. உ. உடுவில் பிரதிநிதி) அவர்கள் உரை நிகழ்த்துகிறார்.

# தோற்றமும் எழுச்சியும்

ஆனைக்கோட்டை திருவள்ளுவர் சேவா மன்றம் தனது பத்தாவது ஆண்டு நிறைவு விழாவை இன்று கொண்டாடுவது பேரானந்தத்துக்குரியது.

மக்கள் நாட்டின் பல பாகங்களிலும் சிறு சிறு கூட்டங்களாக வாழுகின்றார்கள். அவர்கள் மத்தியில் ஒற்றுமையை காண்பது மிகவும் அரிதாக இருக்கிறது.

பொருளாதாரத்தில், கல்வியில், நாகரீகத்தில் முன்னேறியவர்களும் சில இடங்களில் வாழுகின்றார்கள். அவர்கள் மத்தியிலும் ஒற்றுமையைக் காண்பது குதிரைக் கொம்பாக இருக்கிறது.

எமது சமுதாயத்தில் மிகவும் மலிந்த நிலையில் இருக்கும் இலட்சணங்களான போட்டி, பொறாமை, சூட்சி, வஞ்சம் ஆகியவை இவைகள் சமுதாயத்தை சகல கோணங்களாலும் நசித்துக் கொலை செய்வதைக் காண நெஞ்சம் பொறுக்குதில்லை,

கல்வி, செல்வம், நாகரீகம் எதுவுமே இல்லாத காட்டுமிராண்டிகளாக வாழும் ஏனைய பகுதிகளில் நிலவும் பலம்மிக்க ஒற்றுமையைக் கண்டு எமது சமூக மக்கள் வெட்கித் தலை குனியவேண்டும்.

இந்த நிலையில் ஆனைக்கோட்டை சக்கரப்பிள்ளை வீதியில் வாழும் இம்மன்ற மக்கள் ஏனைய பகுதிகளில் வாழும் மக்கள் அனைவருக்கும் வழி காட்டக்கூடிய தகுதியும், திறமையும், ஒற்றுமையும் அவர்களிடம் உண்டு இத்தனைக்கும் நிலைக்களமாக அமைந்தது திருவள்ளுவர் சேவா மன்றமே 1968-ம் ஆண்டு சனவரி மாதம் 15-ம் உ முன்பு யாழ் அரசாங்க அதிபராக இருந்த திரு. வேணன் அபயசேகரா அவர்களால் திறந்து வைக்கப்பட்ட நிலையக் கட்டிடம் கதியற்ற மக்களின் கலங்கரை விளக்காக நின்று ஒலிபரப்புகிறது.

ஒரு சமூகம், ஒரு இனம், ஒரு நாடு எழுச்சி அடைவதும் வீழ்ச்சி அடைவதும் ஒரு தனி மனிதராலேயே என்பது உலகின் கடந்த கால வரலாறுகள் கூறுகின்றது அமெரிக்காவுக்கு ஒரு ஆபிரகாம் லிங்கன், இந்தியாவுக்கு ஒரு காந்தி, நீக்கிரோ மக்களுக்கு ஒரு மாட்டின் லூதர் கிங் இப்பேற்பட்ட தியாக சீலர்கள் தோன்றியதினாலேயே மேற்படி நாடுகளும்,, சமூகங்களும் இன்று சுதந்திரத்தை அனுபவிக்கின்றன.

ஆனைக்கோட்டைக் கிராமத்தில் வாழும் மன்ற மக்கள் மத்தியில் தோன்றியிருக்கும் பெரியார் வே. பாலகிருஷ்ணன் அவர்களின் தன்னலமற்ற தியாக சிந்தையே இன்றைய இப் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவின் மூலக்கல்லாகவும் முன் ஒளியாகவும் விழங்குகிறது.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்று அப்பர் சுவாமி கூறிய பொன் மொழியை இலட்சியமாகக் கொண்டு வாழும் பெரியார் வே பாலகிருஷ்ணன் அவர்கள் தன் மக்களின் நிலை கண்டு ஒன்றுபட்ட வாலிபர் இயக்கத்தை உருவாக்கி அதன் செயலாளர், பொருளாளர் பதவிகளில் இருந்து பல பணிகள் செய்து தமது பொருள்கள் பலவற்றை செலவு செய்து, இயக்கத்தை வழி நடாத்திச் செல்வதுடன் தனது சொந்தக் காணி நிலத்தையே தானம் செய்து இக் கட்டிடத்தையும், ஒற்றுமையும் வளர்த்த பெரியார் வே. பாலகிருஷ்ணன் அவர்களை ஆனைக்கோட்டை மக்கள் என்றும் மறக்க மறக்மாட்டார்கள்.

பெரியார் அவர்களின் அபிலாசைகள் பூர்த்தியாக திருவள்ளுவர் சேவா மன்றம் மேலும் ஒற்றுமையில் வளர்ந்து சமூகத்துக்கும், இனத்துக்கும், மொழிக்கும், நாட்டுக்கும் பணிகள் பல புரிய இன்றைய இளந்தலைவர் செல்வன் ம. வே. பாலசிங்கம், செயலாளர் திரு மா. பவானந்தன், துணைச்செயலாளர் செல்வன் வே. பாலேந்திரன் தனாதிகாரி திரு. மா. பசுபதி ஆகியோர்களின் தன்னலமற்ற புனித பணி வளரவும், அவர்களின் இன்றைய செயலை பாராட்டுவதுடன் எல்லாம் வல்ல இறைவன் ஆசி நீர் என்னும் மாரி பொழிந்து காப்பாற்ற வேண்டுகிறேன்.

**வாழ்க திருவள்ளுவர் சேவா மன்றம்**
**வளர்க ஒற்றுமை.**

வணக்கம்.

ஆசீர்வாதம் ஹென்றி
சமாதான நீதிபதி,
பட்டின சபை உறுப்பினர்.

சுன்னாகம்,
28-10-74.

# 1968-ம் ஆண்டில்

# கட்டிட நிதியாகவும், திறப்பு விழா நிதியாகவும் பண உதவி புரிந்த அன்பர்கள்

| | |
|---|---|
| வே. பாலகிருஷ்ணன் | 275-00 |
| மு. பாக்கியநாதன் | 50-00 |
| வே. பரமநாதன் | 25-00 |
| ச. சின்னையா | 50-00 |
| ச. மாணிக்கம் | 25-00 |
| ச. அப்பையா | 25-00 |
| மா. பசுபதி | 50-00 |
| க. தணிகாசலம் | 50-00 |
| வே. நடராசா | 50-00 |
| க. சண்முகம் | 25-00 |
| பொ. கனகரத்தினம் | 50-00 |
| மா. பலானந்தன் | 25-00 |
| வே. கந்தையா | 25-00 |
| ச. தருமலிங்கம் | 25-00 |
| க. நகுலேஸ்வரன் | 40-00 |
| மு. செல்லையா | 50-00 |
| மா. காணிக்கைச்செல்வம் | 25-00 |
| வ. சரவணமுத்து | 45-00 |
| வ. செல்லையா | 50-00 |
| சி. செல்லத்துரை | 25-00 |
| ம. தம்புத்துரை | 25-00 |
| மொத்தம் | 1010-00 |

# அன்பளிப்பு (பொருட்களாக)

படங்கள் தந்தோர் விபரம் :

(1) செல்வன் நடராசா உதயகுமார் ஒன்று
(2) திரு. மா. காணிக்கைச்செல்வம் ,,
(3) திரு ம. தம்புத்துரை ,,
(4) செல்வன் ம வே. பாலசிங்கம் ,,
(5) திரு. ச. மாணிக்கம் மேசை ஒன்று
(6) திரு. மா. பசுபதி காகிதப்பெட்டி ஒன்று

மற்றும் அன்பளிப்புச் செய்த
ஸ்தாபனங்களுக்கும், அன்பர்களுக்கும்
எங்கள் மன்றத்தின் விசேட
நன்றி உரித்தாகுக.

